





ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் எழிலன் நாகநாதன் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வார்டு 111, ஆண்டர்சன் சாலை ரூ.135 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட தொடக்கப் பள்ளி கட்டடத்தை பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்து சிறப்பித்தார். இந்நிகழ்வில் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, மாமன்ற உறுப்பினர் நந்தினி கலந்து கொண்டனர்.



உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்டம், பழனியில் தண்டாயுதபாணி கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி வளாகத்தில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு 24.08.2024 மற்றும் 25.08.2024 ஆகிய இரு தினங்கள் நடைபெறவுள்ளதை முன்னிட்டு, மாநாடு முன்னேற்பாடு பணிகளை நேற்று (22.08.2024) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அருகில் திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம் உட்பட பலர் உள்ளனர்.

### கட்டடப் பணிகள் - மின் கட்டமைப்பு - உட் கட்டமைப்புகள் மேற்கொள்ள

# மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு ரூ.111.50 கோடி நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஆக.23-

மாநகர் போக்குவரத்துக் கழகத்தை சார்ந்த 6 பணிமனைகளில் கட்டடப் பணிகள் மற்றும் மின்சாரப் பேருந்துகளுக்கான மின் கட்டமைப்பு மேம்பாட்டிற்காகவும், 5 பணிமனைகளில் டீசல் பேருந்துகளை மாற்றுவதற்கான உட்கட்டமைப்புகளை உருவாக்குவதற்காகவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ரூ.111.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்.

மாநகர் போக்குவரத்துக் கழகத்தை (MTC) உலகத் தரம் வாய்ந்த பொதுப் போக்குவரத்து அமைப்பாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டு உலக வங்கியின் நிதியுதவியுடன் சென்னை நகர கூட்டாண்மைத் திட்டம் (CCP) செயல்படுத்தப்பட உள்ளது.

அதன்படி, தமிழ்நாடு அரசின் போக்குவரத்துத் துறை மற்றும் மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு இடையே 20.10.2023 அன்று பொதுப் போக்குவரத்து சேவை ஒப்பந்தம் (Public Transport Service Contract PTSC) கையெழுத்தானது. இதன் மூலம், பேருந்து இயக்கத்தில் முக்கிய செயல்திறன் குறியீடுகளை (KPI) உறுதி செய்து, அதன் தொடர்ச்சியான செயல்பாடுகளுக்கு ஏற்ப, தமிழ்நாடு அரசு வரவிற்கும் செலவிற்குமான வித்தியாசத் தொகையை வழங்கும்.

முதற்கட்டமாக, 500 மின்சாரப் பேருந்துகளுடன், மாநகர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் எண்ணிக்கையை அதிகரித்து இயக்கப்படவுள்ளது. இப்பேருந்துகள் பெரம்பூர் - II, தண்டையார்பேட்டை - I, வியாசர்பாடி, பூவிருந்தவல்லி, கலைஞர் நகர் - I மற்றும் பெரும்பாக்கம் - I ஆகிய 6 பணிமனைகள் மூலம் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்படி பணிமனைகளில் இயக்கப்பட்டு வரும் டீசல் பேருந்துகளை கலைஞர் நகர் - II, பெரும்பாக்கம் - II, குரோம்பேட்டை- III மற்றும் செம்மஞ்சேரி ஆகிய புதிதாக உருவாக்கப்படவுள்ள 4 பணிமனைகள் மற்றும் தற்பொழுது இயங்கி வரும் தண்டையார்பேட்டை - II பணிமனைகளில் மாற்றுவதற்கு தகுந்த உள்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

சென்னை நகர கூட்டாண்மைத் திட்டத்தில், மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் உட்கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டு, 500 மின்சாரப் பேருந்துகள் சிறந்த முறையில் இயக்கப்படும். மேலும், மின்சாரப் பேருந்துகளை இயக்குவதால் எரிபொருள் செலவு குறைவதுடன், காற்று மாசுபாடு குறையும்.

இப்புதிய மின்சாரப் பேருந்துகள் இயக்கப்படவுள்ள 6 பணிமனைகளில் கட்டடப் பணிகள் மற்றும் மின்சாரப் பேருந்துகளுக்கான மின் கட்டமைப்பு மேம்பாட்டிற்காகவும் மற்றும் டீசல் பேருந்துகளை மாற்றப்படவுள்ள 5 பணிமனைகளில் உட்கட்டமைப்புகளை உருவாக்குவதற்காகவும் ரூ.111.50 கோடி ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

### திருச்செங்கோட்டில் கத்தியால் வெட்டப்பட்டு உயிரிழந்த

# சிறுமியின் பெற்றோருக்கு ரூ.3 லட்சம் நிதி உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஆக.23-

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு, சத்திநாயக்கன்பாளையம் கிராமத்தில் கத்தியால் வெட்டப்பட்டு உயிரிழந்த சிறுமியின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அளித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், சத்திநாயக்கன்பாளையம் கிராமம், குடித்தெருவைச் சேர்ந்த செந்தில்குமார், த/பெ.சண்முகம் என்பவர் கடந்த 27.07.2024 அன்று அவரது வீட்டிற்கு அருகில் வசிக்கும் சிறுமி தஸ்மிதா (வயது 10), த/பெ. பிரபு, தங்கராசு (வயது 50), த/பெ. பழனியப்பன் மற்றும் முத்துவேல் (வயது 35), த/பெ.ராஜீ ஆகிய மூவரையும் கத்தியால் வெட்டிய சம்பவத்தில் பலத்த காயமடைந்த சிறுமி தஸ்மிதா என்பவர் சேலத்திலுள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் இன்று (22.08.2024) உயிரிழந்தார் என்ற செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் காயமடைந்து சேலம் தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் தங்கராசு மற்றும் முத்துவேல் ஆகிய இருவருக்கும் சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்த சிறுமி தஸ்மிதாவின் பெற்றோருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது பெற்றோருக்கு மூன்று இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

### போராட்டம் நடத்தி வரும் விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்துங்கள்!

# பஞ்சாப், அரியானா மாநில அரசுகளுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு!

## பேச்சுவார்த்தை விபரங்களை அறிக்கையாக தாக்கல் செய்யவும் ஆணை!

புதுடெல்லி, ஆக. 23 –

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடத்தி வரும் விவசாயிகளிடம் பஞ்சாப், அரியானா மாநில அரசுகள் கூட்டாக பேச்சுவார்த்தை நடத்தி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விளை பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பஞ்சாப், அரியானா மாநில எல்லைகளில் விவ சாயிகள் நடத்தி வரும் போராட்டம் குறித்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது விவசாயிகள் போராட்டத்தால் தொடர்ந்து மூடப்பட்டிருக்கும் சாலைகளை திறப்பது குறித்தும், விவசாயிகள் பிரச்சினைக்கு தீர்வு காண்பது குறித்தும் ஹரியானா, பஞ்சாப் மாநில அரசுகள் கூட்டாக பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியது.

மேலும், பேச்சுவார்த்தை விபரங்களை அறிக்கையாக தாக்கல் செய்ய வேண்டும் என்று இருமாநில அரசுகளுக்கும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

விவசாயிகள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண உச்சநீதிமன்றம் அமைத்துள்ள குழுவானது என்னென்ன அம்சங்கள் மீது ஆய்வு செய்ய வேண்டும் என்று விரைவில் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

வழக்கின் விசாரணை செப்டம்பர் 2ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு முன்னிட்டு

# தி.மு.க. இளைஞர் அணி நடத்தும் “என் உயிரினும் மேலான கலைஞர்” நூற்றாண்டு பேச்சுப்போட்டி!

## அமைச்சர், மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு முன்னிட்டு தி.மு.க. இளைஞர் அணி நடத்தும் “என் உயிரினும் மேலான கலைஞர்” நூற்றாண்டு பேச்சுப்போட்டி (24.8.2024 சனிக்கிழமை) காலை 8 மணி முதல் சிதம்பரம் கடலூர் பைபாஸ் ரோடு வண்டிகேட் அருகே அமைந்துள்ள ஸ்ரீ கிருஷ்ணா கிராண்ட் மகாலில் நடைபெற உள்ளது.

அது சமயம் இப்பேச்சு போட்டிக்கு வருகை தரும் மாணவ மாணவியர் காலை 7 மணி அளவில் ஸ்ரீ கிருஷ்ணா கிராண்ட் மகாலுக்கு வருகை தந்து வருகை பதிவினை உறுதி செய்து கொள்ளவும்.

மேலும், இந்நிகழ்வில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர மேயர், இந்நாள் ஒன்றியப் பெருந்தலைவர்கள், நகரமன்றத் தலைவர்கள், பேரூராட்சி மன்றத் தலைவர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள், கழக சார்பு அணிகளின் மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞரணி தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுகொள்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**

செயலாளர் கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்புரை! க.செல்வம் எம்.பி. பங்கேற்பு

# சித்தாமூர் கிழக்கு ஒன்றியக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## ஒன்றிய செயலாளர் ஏ.சிற்றரசு அறிக்கை!

காஞ்சிபுரம், ஆக.23,

சித்தாமூர் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.சிற்றரசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், சித்தாமூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை (24.8.2024 சனிக்கிழமை) காலை 11 மணிக்கு, சாய்ராம் மஹால், கொளத்தூர் தேன் பாக்கத்தில் நடைபெறுகின்றது. கூட்டத்திற்கு ஒன்றிய அவைத் தலைவர் தா.வரதராஜன் தலைமை வகிக்கிறார். நான்( ஒன்றிய செயலாளர் சித்தாற் காடு ஊராட்சி மன்ற தலைவர் ஏ.சிற்றரசு ) வரவேற்றுப் பேசுகிறேன்.

ஆ.முரளி, க.நிர்மல்குமார், சு.ஜெயந்தி, சி.கே. ரமணய்யா, செ.அய்யப்பன், கி.குமரேசன், அ.விஜயன், பிரேமாசங்கர், தீபாமுனுசாமி, எஸ்.ரவி, எஸ்.வடிவேல், தீ.செல்வவிநாயகம், கே.இளங்கோவன், எஸ். மோகன், பி.மாரிமுத்து, ச.அலமேலு, எஸ்.ஜெயமூர்த்தி, பி.வெங்கடேசன், கோ.பத்மநாபன், செ.வல்லரசு, ஆர்.நரேந்திரன், எஸ்.முனுசாமி, இ.பாபு, எஸ்.தருன்வேல் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

இதில் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., ப.அப்துல்மாலிக், ச.இனியரசு, டாக்டர் ஆர்.டி.அரசு, வி.ஏழுமலை, டி.மோகன்தாஸ், சாந்திரவிக்குமார், எம்.குணசேகரன், பி.வி.புருஷோத் தம்மன், ஏ.என்.பாரத், ஜி.பால்ராஜ், பெரு. கிருஷ்ணன், சி.பி. ரவிக்குமார், ஜி.தருமன், எம்.கண்ணன், க.பூபாலன், எம்.வசந்தராஜ், டி.பாலசுந்தரம், கே.நாகராஜ், ஆர். ஞானகுமார், பொன்.முருகாநந்தம், சாந்தாதனசேகரன், எம்.ஆர்.தனசேகர், அல்லிமுத்து, ஜெ.சதீஷ்குமார், கே.முத்து, கலைச்செல்விஜெகநாதன், டி. சாமிநாதன், பி.திருமலை, டி.சிவனேசன், வினோதினி, கே.எஸ்.ஆதிகேசவலு, ஆ.கோ.பாண்டுரங்கன், எல்.எஸ். ரவிந்திரநாத், வெடால்.மு.ராமலிங்கம், எம்.வஜ்ஜரவேலு, ஆர்.கிஷ்டப்பன், ஜி.விஷ்ணுவரதன், இரா.மூர்த்தி, கோ.பரந்தாமன், ஜெ.பல்லவதாஸ், இனிய மதிகண்ணன், ஜீவாபூலோகம், பாரதிகாண்டீபன், பி.கன்னியப்பன், கே.எஸ்.ஜெயராமன், ஜி.வி.பெருமாள், விநாயகமூர்த்தி, சங்கரலிங்கம், முருகதாஸ், சரவணன், தா.பூலோகம், மு.கண்ணன், ஜி.ஞானபிரகாசம், டி.பழனி ஆசிரியர், பி.ஜெகதீசன், ஆர்.முகுந்தன், ஜி.முரளி, மு.அமுதா, பா.அனுசுயா, அப்பு என்கிற பெரியசாமி, ஆர்.காமராஜ்., ஜி.மணி கண்டேன், ஏ.கார்த்திக்,டி.தேசமுத்து, எஸ்.கலைமணி, அ. பங்கஜவள்ளி, பி.கற்பகம், ராஜாமுகமது, டி.மதன்,இ. அண்ணாதுரை, முகமது மாஷீக், எஸ்.தினகரன், பி.பிரித்விராஜன்,ஆர்.பஞ்சநாதன்,எம்.சந்தோஷ்குமார், எம்.உதயசங்கர்,பி. உஷா, ஜெ.எஸ். கண்ணன், விஜயலட்சுமி முத்தமிழ்பாக்கியநாதன், ஏ.ராஜ சேகரன்,அ.ரவி, ரமனிரமணய்யா, மு.வடிவேல், மணிமேகலை மோகனசுந்தரம், ந.பெருமாள், கலையரசி இருதய நாதன், குமுதாதுரைராஜ், அஞ்சலைமாரிமுத்து மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். கே.எம். சங்கர், எஸ்.அன்பரசு ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

அதுபோது கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படவிருப்பதால் சம்பந்தப்பட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும் படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஒன்றியச் செயலாளர் ஏ.சிற்றரசு கேட்டுக் கொண்டுள்ளார்.



வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி கணியம்பாடி ஒன்றியம் சோழவரம் ஊராட்சி கிராமத்தில் கணியம்பாடி தெற்கு ஒன்றியம் மற்றும் பென்னாத்தூர் பேரூராட்சி சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது . இதில் சிறப்பு அழைப்பாளராக வேலூர் மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ.கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் .இதில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமது சகி,மாநில அமைப்பு சாராஓட்டுனர் அணி தலைவர், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர் மு.பாபு, கணியம்பாடி தெற்கு ஒன்றியச் செயலாளர் என்.கஜேந்திரன், பேரூராட்சி செயலாளர் பி.அருள்நாதன், மாவட்ட துணைச் செயலாளர்கள் கே.பாண்டியன், ஜி.எஸ்.அரசு, கிளை கழக செயலாளர்கள், ஒன்றிய நிர்வாகிகள் , பேரூராட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம், மாதனூர் ஊராட்சி ஒன்றியம் மிட்டாளம் முதல் ஊட்டல் புண்ணியஸ்தலம் வரை ரூ.5.03கோடி மதிப்பீட்டில் PMGSY திட்டத்தின் கீழ்இரு வழிதார் சாலை அமைக்கும் பணி துவக்க நிகழ்ச்சி ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் வில்வநாதன் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராக கழக அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாநில தலைவர், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கலந்துகொண்டு பணியை துவக்கி வைத்தார். உடன் குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், ஒன்றியக்குழு தலைவர் ப.ச.சுரேஷ்குமார், ஒன்றிய கழக நிர்வாகிகள், ஊரக உள்ளாட்சிமன்ற மன்ற உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.